Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No CC.NO. 228/2023
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No. 03 , Page.No. 109/23

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வி. சிவன்யா | | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. செல்வவேல் | தொழில் | உதவி ஆய்வாளர் |
| கிராமம் | | மதம் | |
| மாவட்டம் | கள்ளக்குறிச்சி | வயது | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 16th day of February 2026
சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>.- ( எதிரி ஆஜர் )

நான் தற்போது கள்ளக்குறிச்சி மாவட்டம் மூங்கில்துறைபபட்டு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 30.05.2023 அன்று மாலை 4.00 மணிக்கு நான் திருப்பத்தூர் நகர காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது எனக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் திருப்பத்தூர் நகர எல்லைக்குட்பட்ட அம்போத்தகர் நகர் LIC பின்புறம் பொன்னியம்மன் கோயில் அருகே சென்றுக் கொண்டிருந்த போது ஒரு நபர் கோயிலில் முகப்பில் இருசக்கர வாகனத்தில் நின்றுகொண்டிருந்தார். அங்கு சென்ற போது அங்கிருந்த ஆஜர் எதிரி தப்பியோட முற்பட்டார் அவரை பிடித்து விசாரித்த போது அவரது இருசக்கர வாகனத்தில் 1). 90 ML அளவு கொண்டStrong XXX rum எண்ணிக்கை 05 பாட்டில்கள் 2). 180 ML அளவு கொண்ட MGM Diamond XXX rum எண்ணிக்கை 03 ஆக மொததம் 08 பாட்டிள்களை அவர் விற்பனைக்கு வைத்திருந்ததாக தெரிவித்தார். மேற்படி பொருட்கள் மற்றும் இருசக்கர வாகனத்ததை என்னுடன் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த இரண்டாம் நிலைக்காவலர் செந்தில் மற்றும் முதல் நிலைக்காவலர் குமார் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து எதிரியை

காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்குஉட்படுத்தினேன். பின்பு அ.சா.1, 2 சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து இவ்வழக்கு சான்று பொருள் அ.சா.பொ.1 நீதிமன்றத்தில் படிவம் -95 மூலம் ஆஜர் செய்து எனது விசாரணை முடித்து எதிரி மீது தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் பிரிவுகள் 4(1)(a), 4(1)(h)ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். ( **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 03 ஆகவும், படிவம்-95 அ.சா.ஆ. 04 ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது.)**

**எதிரி தரப்பு குறுக்கு விசாணை**

. முதல் தகவல் அறிக்கை நான் தான் பதிவு செய்தேன் என்றாலும், நான் தான் புகார்தாரர் என்றாலும் நான் தான் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி என்றாலும் சரிதான். இவ்வழக்கில் பார்வை மகசர் மாதிரி வரைப்படம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் இருந்து மது பாட்டிள்களை வாங்கிய நபர்கள் யாரோனும் சாட்சியாக இவ்வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. எதிரியை பிடித்ததாக கூறும் இடத்திற்கு அருகாமையில் பல வீடுகள் உள்ளன என்றாலும், கூட்ட நெரிசல் மிக்க பகுதி என்றாலும் சரிதான். அங்குள்ள நபர்களை சாட்சியாக விசாரிக்க வில்லை என்றால் யாரும் முன்வரவில்லை. அவ்வாறு அவ்விடத்தில் யாரும் முன்வராததால் அவர்கள் மீது நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளேன் என்றால் இல்லை. நான்கூறுவது போல் எதிரி எந்த தவறும் செய்யவில்லை என்றாலும், புள்ளிவிவரத்திற்காக எதிரி மீது இவ்வழக்கு தொடுத்துள்ளேன் என்றாலும், இவ்வழக்கு ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. இறுதியறிக்கையில் 10 ம் காலத்தில் 3ம் பத்தியில் பொருட்களின் எண்ணிக்கை குறிப்பிடவில்லை என்றாலும், எனவே அவரச கதியாக இறுதியறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும், புள்ளிவிவரத்திற்காக தொடுக்கப்பட்டது வழக்கு என்றாலும் சரியல்ல. கையிருப்பாக வைத்திருந்த பாட்டிகளை வைத்து இவ்வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

KODHAVADI SUBRAMANIAN DINESH

Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH

Witness sign

Judicial Magistrate No. 1
Tirupattur.